SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : பந்தநல்லூர் ஸ்ரீ பசுபதீஸ்வரர் தேவஸ்தானத்திற்கு பரம்பரையாக இருந்த டிரஸ்டிக்கு ஏதோ தகராறு ஏற்பட்டு இதனால் வேறு டிரஸ்டிகளை நியமிக்க மனுக்கள் கோரப்பட்டிருக்கின்றனவா ? டிரஸ்டிகளை வேறு முறையிலே அமைக்கப்போகிறார்களா ? அல்லது பரம்பரை டிரஸ்டிகளை நியமிக்கப்போகிறார்களா ? ஏன் பரம்பரை டிரஸ்டி நீக்கப்பட்டிருக்கிறார் என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பரம்பரை டிரஸ்டி சரியான முறையில் நடந்துக்கொள்ளாததினால் அவர் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார். அடிஷனல் டிரஸ்டி என்று வேறு டிரஸ்டிகள் போடுவதற்கு வசதி செய்கிறார்கள். அதற்கு மனுக்கள் வருகின்றன. அவைகளையெல்லாம் பார்த்து நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : இந்த அடிஷனல் டிரஸ்டியை எப்போது போடப்போகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதற்கு மனுக்கள் வருகின்றன. அவைகளைப் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

SRI A. VEDARATHNAM : இந்த பரம்பரை டிரஸ்டியின் பேரில் என்ன குற்றச்சாட்டு ? ஏன் டிஸ்மிஸ் செய்யப்பட்டார் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சில தவறுகள் ஏற்பட்டதினால் டெபுடி கமிஷனர் நடவடிக்கை எடுத்துக்கொண்டு அவரை சஸ்பெண்ட் செய்திருக்கிறார்.

SRI K. B. S. MANI : பரம்பரை டிரஸ்டிகள் எந்த அடிப்படையிலே நியமிக்கப்படுகிறார்கள் ? புராதன சொத்துக்கள் கோவிலுக்கு எழுதிவைத்ததின் பேரிலே அவர்கள் கோவில் சொத்துக்கு வாரிசாக நியமிக்கப்படுகிறார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இது சட்ட ரீதியிலே செய்யப்படுகிறது. இதற்குமேல் ஒன்றும் விளக்குவதற்கில்லை.

Pranthaneri tank water (utilization)

* 1097 *Q.*—SRI T. S. RAMASWAMY : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether any scheme has been sanctioned for the utilization of the overflow water from Pranthaneri tank in the Kanyakumari district, for the dry lands of Tirunelveli district; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.